நமது முழக்கம்

அண்ணாதுரை

நமது முழக்கம்

20 A:58

சென்னை-1

அண்ணாதுரை

தாஜ்மஹால் பதிப்பகம்
சென்னை - 5

முதற் பதிப்பு
1953 ஜூன்

76149a

விலை 0—8—0

அச்சிட்டது:-
ஸ்ரீ ரங்கா பிரஸ், சென்னை-2

நன்றி!

—o—

அறிஞர் அண்ணாதுரை அவர்கள் மே நாளன்று சென்னைக் கடற்கரையில் ஆற்றிய சொற்பொழிவை **நமது முழக்கம்** என்னும் பெயரால் புத்தக உருவில் வெளியிட ஆசைப்பட்டு சென்னை திருவல்லிக்கேணி, தி. மு. கழகத்தினரைக் கேட்டேன். அவர்களும் இதனை வெளியிட அனுமதி தந்துதவினார்கள். அவர்களுக்கும், இதனை எழுதித் தந்துதவிய தோழர் மலரழகன் அவர்களுக்கும் என் மனங்கனிந்த நன்றி!

உரிமையாளன்

தாஜ்மஹால் பதிப்பகம்

நமது முழக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆண்டு தோறும் கொண்டாடி வரும் மே தினத்தைக் கொண்டாடவே இங்கே நாம் கூடியிருக்கிறோம். இக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கும் திருவல்லிக்கேணி திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு என் நன்றி!

சென்னையில் வேறு சிலர்

இங்கு நாம் மே தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் சென்னையில் பலர் பற்பல இடங்களில் மே தினக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருப்பார்கள். இதே நேரத்தில் நண்பர் ஜீவானந்தம், காரன்ஸ் ஸ்மித் நகர் மைதானத்தில் பொருளாதாரத்திற்கும் பொதுவுடமைக்கும் உள்ள தொடர்பைப் பற்றி விளக்கிக் கொண்டிருக்கக் கூடும். ஹைகோர்ட் கடற்கரையில், இந்த நேரத்தில் சில நண்பர்கள் சமதர்மத்தையும், சமுதாயத்தையும் பற்றி பேசிக் கொண்டிருக்கக் கூடும். இன்னும் வேறு சிலர் பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கக் கூடும்.

மக்களிடம் பேசுகிறோம்

உலகத்திலேயே இரண்டாவது அழகிய கடற்கரை என்று கூறப்படும் இந்த அழகான கடற்கரையிலே, அற்புதமான காற்றை அனுபவித்துக் கொண்டு, நல்ல

பாடல்களைக் கேட்டுக் கொண்டு, குடும்பத்துடன் குதூ கலமாக, நண்பர்களுடன் உலாவிக் கொண்டு இருக்க வேண்டியவர்களாகிய நாம் (சிலர் அப்படித்தான் இருப் பார்கள் இப்போது) தொழிலாளர்களின் துயர்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். பொதுவுடைமைக்கும் நமக்கும் உள்ள பொருத்தங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறோம். யார் சக்தி வாய்ந்தவர்களோ யாரால் அரசுகளை ஏற்படுத்த முடியுமோ, யாரால் அரசுகளை கவிழ்க்க முடியுமோ, அவர்களிடம், மக் களிடம் பேசுகிறோம்.

வித்தியாசம் உண்டு

பற்பல நாடுகளில் மே விழா கொண்டாடுகிறார்கள். இங்கு நாமும் மே தினத்தைக் கொண்டாடுகிறோம். ஆனால் இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று எனக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மையே, மற்ற கட்சியினருக்கும், நமக்கும் கூட வித்தியாசம் இருக்கிறது. மற்ற அரசியல் கட்சிகள் நாட்டிலே செய்வதை, பேசுவதை நாம் மக்களிடம் எடுத்துச் சொல்ல இருக்கிறோம். அவர்கள் கூறுவதை மக்களிடம் விளக்கிக் கூறுகிறோம்.

இன்று மேதினி யெங்கும் மே தினம் கொண் டாடப் படுகிறது. எத்தனையோ தொழிற் சங்கங்கள் இந்த நாட்டில் மே தினத்தைக் கொண்டுகிறார்கள்.

நூற்றுக்கு நாற்பது பேர்

ஒரு நாட்டில் உள்ள தொழிலாளரின் ஜனத் தொகையில் பெரும் பான்மையோர் தொழிற் சங்கம்

முதலிய வற்றில் சேர்ந்திருப்பார்கள். ஆனால் இந்த நாட்டுத் தொழிலாளரின் ஜனத் தொகையில் நூற்றுக்கு நாற்பது பேர்தான். ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையையோ, தொழிற் சங்கத்தையோ சேர்ந்தவர்களாக இருப்பார்கள். மற்றத் தொழிலாளர்கள் குறிப்பிட்ட ஒரு தொழிற்சாலையையோ, அல்லது ஒரு தொழிற் சங்கத்தையோ சாராதவர்கள்.

அவர்களில் பலர் வயிற்றைக் கழுவ வண்டியிழுப்பவர்கள்; அவர்களில் பலர் முதுகெலும்பு முறிய மூட்டைச் சுமப்பவர்கள்; அவர்களில் பலர் காடுகளில் சென்று கட்டை வெட்டுபவர்கள். அந்தத் தொழிலாளர்களுக்கும் ஆசை மனைவியும், அன்பு மக்களும் இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள், தொழிலாளர்களின் ஜனத் தொகையில் சேர்க்கப்படாதவர்கள். குறிப்பிட்ட தொழிற்சாலையில் வேலை செய்யாதவர்கள் அரசாங்கத்தின் தொழிற் சட்ட திட்டங்களுக்கு உட்படாத தொழிலாளர்கள்.

நாம், இணைப்புப் பாலம்

தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் ஒரு நல்ல பிணைப்பை, இணைப்பை நாம் ஏற்படுத்துகிறோம். தொழிலாளர்களின் நிலையை, ஆட்சியாளர்களுக்கு அறிவிப்பதோடு நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கிறோம். மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மத்தியில் நாங்கள் இணைப்புப் பாலமாக இருக்கிறோம்.

தொழிலாளர்களின் போராட்டங்களை மக்கள் ஆதரிக்காமல் இருக்க, அது தொழில்ாளர், முதலாளி

ஆகிய இவர்களுக்கு இடையே ஏற்பட்ட போராட்டமே தவிர வேறில்லை. அது மக்கள் போராட்டமல்ல, என்ற பிரச்சாரம் கொஞ்ச நாளைக்கு முன் நடந்தது.

நாரதர் வேலை

தொழிலாளர் சம்பளம் அதிகம் வேண்டும் என்கின்றனர். முதலாளிகள் லாபம் அதிகம் வேண்டும் என்கின்றனர். இதில் மக்கள் ஏன் அக்கறை செலுத்த வேண்டும்.

முப்பது முதலாளிகள் இருப்பார்கள். அவர்களிடம் முப்பதாயிரம் தொழிலாளர்கள் போராடுவார்கள். அதைப்பற்றி 30 கோடி மக்களுக்கு என்ன வந்தது? அவர்கள் ஏன் இதில் அக்கறை செலுத்தவேண்டும் என்று பத்திரிகைகள் எழுதின. மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பிணைப்பில்லாமல் வேராறுக் கப் பார்க்கிறது இந்த வேலை செய்யும் பத்திரிகை. வெட்கமில்லாமல், தன் வேலையைக் குறிக்கும் 'நாரதர்' என்ற பெயரை வைத்திருக்கிறது.

இதைப் போன்றவைகளை ஒழித்து, மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் நல்ல தொடர்பை ஏற்படுத்தவே திராவிட முன்னேற்றக் கழகம் வேலை செய்கிறது.

நமது நோக்கம்

தொழிற் சங்கங்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு கிடையாது. தொழிற் சங்கங்களை யார் நடத்தினாலும் சரி,

காங்கிரஸ் நடத்திலும், சோஷியலிஸ்ட் நடத்திலும் தொழிலாளர்களின் குறைகளைக் — கோரிக்கைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி, தொழிலாளர்களின் துயரைத் துடைப்பதுதான் நமது நோக்கம்.

முதலாளிகள் தொழிலாளர்களை மோசம் செய்கிறார்கள். அவர்கள் குறைகளைக் கவனிப்பதில்லை. இந்த முதலாளிகள் யார்? இவர்கள் எப்படி முதலாளியானார்கள்?

முதலாளியாவது எப்படி?

முதலாளி எப்படி உற்பத்தியாகிறான்? எதனால் ஒருவன் முதலாளியாகிறான்? இதற்குச் சுருக்கமான பதில் 'தனிப்பட்ட மனிதன் லாபத்தால் முதலாளியாகிறான்.' இன்னும் கொஞ்சம் விளக்கமாக மார்க்ஸ் கூறுகிறபடி பார்த்தால் 'தொழிலாளிகளின் உழைப்பை முதலாளி திருடிக் கொள்கிறான்.' ஆகவே அவன் முதலாளியாகிறான்.

ஒருவன் ஒரு சரக்கை ஆறு ரூபாய்க்கு வாங்குகிறான். அதை எட்டு ரூபாய்க்கு விற்கிறான். ஒரு ரூபாய் நிர்வாகச் செலவு போனால் மீதமிருக்கும் ஒருரூபாய் அவனுக்குலாபம்! ஒரு பொருளை விற்றால் அவனுக்கு ஒரு ரூபாய் லாபம். ஆயிரம் பொருள்களை விற்றால் ஆயிரம் ரூபாய் லாபம். ஒருரூபாய் ஆயிரம் ரூபாய்களாகி, ஆயிரம் லட்சமாகி,லட்சம் கோடியாகி, கோடிகணக்கிடமுடியாத தொகையாகிவிடுகிறது. முதலாளி லாபத்தால் பெருத்து பெரிய முதலாளியாகிவிடுகிறான்.

இந்தியா—வேட்டைக்காடு

டாடாவுக்கு கிழக்கு மேற்காக 1500 மைல் அகன்று, தெற்கு வடக்காக 1600 மைல் விரிந்து இருக்கும் இந்த பரந்த இந்தியா ஒரு வேட்டைக்காடு. நாராயணன் கோவிலுக்கு நாலுபுறம் வாசல் என்றபடி இந்த இந்திய துணைக் கண்டத்தின் எந்தப் பக்கத்திலும் அவன் வியாபாரம் செய்யலாம். ஜாம்ஷெட்பூரில் இரும்பு எடுக்கலாம், கல்கத்தாவில் ஆணி செய்யலாம், அதை வேறு எங்காவது கொண்டுபோய் விற்கலாம். அவனை யாரும் தடுக்க முடியாது. இந்தியா பூராவும் அவனுக்கு வேட்டைக்காடு.

முதலாளி சரக்கை உற்பத்தி செய்கிறான். ஏராளமாக அவன் உற்பத்தி செய்யும் சரக்கை விற்கவேண்டுமல்லவா? ஆகவே அவனுக்கு மார்க்கெட் தேவையாக இருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு அவன் வியாபாரம் செய்யும் இடம் நாடு பெரியதாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு முதலாளியின் லாபம் பெருகுகிறது—பெரிய முதலாளியாகிறான். உற்பத்தியான சரக்கை விநியோகம் செய்ய பெரிய மார்க்கெட் இல்லாவிடில் பெரிய முதலாளியாக எவனும் ஆகமாட்டான். முதலாளிகள் இன்றைய உலகில் பெரிய நாடுகளில் தான் இருக்கிறார்கள்; சிறிய நாடுகளில் முதலாளிகள் இல்லை.

காட்டை குறைப்போம்

காடு பெரியதாக, மரங்கள் அடர்ந்ததாக இருந்தால், அங்கு புலி வாழும். புலி எதன்மீது வேண்டுமானா

லும் பாயும். காட்டிலே புலி பதுங்க ஏராளமான புதர்கள் உண்டு. புலிகளை ஒழிக்க காட்டைக் குறைக்கவேண்டும். மரங்களை வெட்டவேண்டும். வேலி கட்டி பாதுகாக்க வேண்டும். புலி மறைந்துவாழ அங்கு இடமிருக்காது. வேண்டுமானால் நாய்கள் குரைக்கலாம்; நரிகள் ஊளை யிடலாம்; ஓநாய்கள் உயிர்வாழலாம். ஆனால் புலி மட்டும் வெட்டப்பட்ட காட்டில், வேலி போடப்பட்ட காட்டில் நிச்சயமாக இருக்காது. அதைப் போலத்தான் சிறிய நாடுகளில் முதலாளிகள் இருக்கமாட்டார்கள்.

சிறிய நாடுகளில் முதலாளி உண்டா?

நார்வே நாட்டிலே முதலாளிகள் இருக்கிறார்களா? இல்லை. கிரீசில் முதலாளிகள் உள்ளனரா? ஸ்வீடனில் முதலாளிகள் உள்ளனரா? ஸ்விட்சர்லாந்தில் முதலாளி களைப் பார்க்க முடியுமா? ஸ்பெயினில் முதலாளிகள் வாழ்கிறார்களா? பாரிசில் பார்க்கமுடியுமா, முதலாளி களை? அமெரிக்காவில் முதலாளி இருக்கிறான். அடுத்த படி இந்தியாவில் வளர்கிறான், நான் குறிப்பிட்ட சிறிய நாடுகளில் முதலாளிகள் ஏன் இல்லை தெரியுமா? அந்த நாடுகள் இந்தியாவைப்போல் மிகப் பெரியதல்ல. அந்த நாட்டிலிருக்கும் வியாபாரி ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோடுகளுக்கு இடையே தான் வியாபாரம் செய்யவேண்டும். எனவே அவன் பெரிய முதலாளியாவ தில்லை.

ஒரே இந்தியா எப்போது?

ஆனால் இன்று இந்தியா முழுவதும் முதலாளி களுக்கு திறந்துவிடப்பட் டிருக்கிறது. இவர்களுக்கு இந்தியா திறந்த மார்க்கெட்டாக எப்போது ஆனது!

வெள்ளைக்காரனின் பிக்ஸட் பைனட்டிற்குப் பிறகுதான் இந்தியா ஒன்றானது. நாட்டுக்கு நாடு இருந்த சுவர்களைச் சுக்கலாக்கிய பிறகு இந்தியா ஒன்றானது. இருந்த எல்லைக் கோடுகளை யெல்லாம் அழித்துவிட்ட பிறகுதான் அது அகண்ட இந்தியா வானது. ஒவ்வொரு நாட்டு கோட்டைச் சுவர்களை இடித்து வெள்ளைக்காரன் வெற்றி பெற்ற பிறகுதான் இந்தியா ஒரே நாடாக மாறியது.

இந்தியா ஒரே நாடாக ஒரே ஆட்சியின்கீழ், ஒரே சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட பிறகுதான் இங்கு முதலாளி முதலைகள் கொழுத்தன. இந்தியா பூராவிலும் தங்கு தடையின்றி சென்று சுரண்டி பெருத்து, பெரிய முதலாளிகளாகி விட்டனர். இன்று இந்த நாட்டில் முதலாளிகள் பெருகிவிட்டனர்.

முதலாளித்வத்தை ஒழிக்க....?

முதலாளித்துவத்தை ஒழிக்க பல வழிகள் இருக்கின்றன. முக்கியமாக முதலாளித்துவத்தை ஒழிக்க மூன்று வழிகள் உள்ளன. ஏன் நான்கு வழிகள் என்று கூட சொல்லலாம். நான்காவது வழி சிலருக்குப் பிடிக்காமல்கூட இருக்கலாம்.

முதல் வழி

முதலாளித்துவம் ஒரு பலமான ஸ்தாபனம். அதை ஒழிக்க எல்லா நாடுகளும் விரும்புகின்றன. பல நாடுகள் வெற்றியும் பெற்றிருக்கின்றன. முதலாளித்துவத்தை

முறியடிக்க பயன்படும் சில முறைகளைத்தான், இப்போது கூறப் போகிறேன்.

முதல் வழி கையில் மெஷின் கன்னை எடுத்துக் கொண்டு போய் முதலாளிகளைச் சுட்டுவிடலாம். அது சட்ட விரோதமாயிற்றே என்று எண்ணலாம். ஆம்! சட்டவிரோதந்தான். சட்டத்தைப் பற்றிக் கவலைப் படாதவர்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

இரண்டாவது வழி

முதலாளிகள் லாபத்தால் வளர்கிறார்கள் என்று முன்பே குறிப்பிட்டேன்! முதலாளிகளின் லாபத்தைக் குறைக்க வேண்டும். முதலாளிகளுக்குக் கிடைக்கும் லாபத்தை அப்படியே அரசாங்கம் உறிஞ்சிவிட வேண்டும். முதலாளிகளுக்கு ஓரளவு லாபம்தான் கிடைக்க வழிசெய்யவேண்டும்.

முதலாளிகளுக்கு கிடைக்கும் லாபம் அவர்கள் மேனி மினுக்குக்கு பயன்படுத்தும் அளவு இருக்கக் கூடாது. அவர்களது வாழ்க்கை நடத்துவதற்கு, குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குப் போதுமானதைத் தவிர, மீதிப் பணத்தை வரிபோட்டு அரசாங்கம் வாங்கிக் கொள்ள வேண்டும்.

அப்படி செய்தால் முதலாளிகள் பெருகவும் மாட்டார்கள். அவர்களிடம் பொருளும் குவியாது. வரி போட்டு அவர்களிடமிருந்து வாங்கும் பணத்தில் மக்களுக்கு நல்லது செய்யலாம். இதனால் முதலாளித்துவம் ஒழிந்துவிடும்; ஓங்கி வளராது.

மூன்றாவது வழி

முதலாளித்துவத்தைக் குழிதோண்டிப் புதைக்க இன்னென்றும் செய்யலாம். தனிப்பட்ட எவரும் எந்த தொழிற்சாலையையும் எடுத்து நடத்த அனுமதிக்கக் கூடாது. முதலாளிகளிடமிருக்கும் எல்லா ஆலைகளையும் அரசாங்கம் கைப்பற்றிக்கொள்ள வேண்டும். எல்லா தொழிற்சாலைகளையும் சர்க்கார் எடுத்து நடத்தவேண்டும். அவ்விதம் செய்தால் அதில் கிடைக்கும் லாபம் அரசாங்கத்தைச் சாரும். எந்த தனிப்பட்ட முதலாளியையும் சாராது. அதனுல் முதலாளித்துவம் வளராது. பூண்டே இல்லாமல் ஒழிந்துவிடும். அப்படித்தான் இன்றைய உலகில் பலர் செய்து வருகிறார்கள்.

நான்காவது வழி

முதலாளிகள் அதிக சரக்கை தயார்செய்து, அகண்ட தன் நாடு பூராவிலும் விற்று, நிறைய லாபம் சம்பாதித்து பெரிய முதலாளிகள் ஆகிறார்கள். இம் முறையை ஒழிக்க வேண்டும். முதலாளிகள் ஒரு குறிப்பிட்ட இடம் வரையில்தான் வியாபாரம் செய்யலாம்; அதற்குமேல் செல்ல வேறு அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும் என்ற முறை இருக்கவேண்டும். அதாவது மிகப் பெரிய நாடுகளை இரண்டு அல்லது மூன்றாகப் பிரித்துவிடவேண்டும். பரந்த பெரிய நாடுகளை சிறிய நாடுகளாக்கிவிட வேண்டும்.

நாட்டுப் பிரிவினையைக் கைக்கொண்டு சிறிய நாடுகளாக்கிவிட்டால் நிச்சயமாக முதலாளித்துவம்

வளராது. இந்த முறை பல நாடுகளில் உள்ளன. நார்வேயும், ஸ்வீடனும் தனி நாடுகளாக இருப்பதால் தான் அங்கு முதலாளிகள் இல்லை. ஆகவே நான்காவது வழி 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்று நாம் கூறு கிறோம். இது சிலர் ஏற்காமலிருக்கலாம். ஆனால் இது தான் நான்கில் ஏற்கக்கூடியது என்பது உண்மை!

கூட்டு வியாபாரம்

முதலாளிகளை இந்த வழிகளில் குறைத்துவிட லாம். இதனால் முதலாளித்துவம் தேய்ந்து மறைந்து விடும். இன்று முதலாளிகள் ஒன்றாகச் சேருகிறார்கள். முதலாளிகள் ஒன்று சேர்ந்து கூட்டு வியாபாரம் நடத்துகிறார்கள். 'ஒரு புதிய தொழிற்சாலையை ஆரம் பிக்க இவ்வளவு பணமா தேவை! நான் 10 லட்சம் போடுகிறேன். நீ 25 லட்சம் போடு'' என்று கூட்டுத் தொழில் நடத்துகின்றனர். அதனால் மேலும் மேலும் பலமடைகிறார்கள். ஆகையால் அதைத்தடுக்கவேண்டும்.

முதலாளித்துவம்—ஒரு யானை

முதலாளித்துவம் ஒரு மதம் பிடித்த யானை. அந்த யானையைப் பிடித்து, வாழை நாரினால் துதிக்கையைக் கட்டி, அந்தக் கயிறை ஒரு வாழை மரத்தில் கட்டி விட்டு, 'பார், பார் நான் முதலாளித்துவத்தைக் கட்டிப் போட்டுவிட்டேன்'' என்று கூறினால் சரியா?

யானை ஒரு இழுப்பு இழுத்தால் அதன் கட்டு அறுந்து விடும். அது மட்டுமா? விடுபட்டதும் தான் கட்டப் பட்டிருந்த வாழை மரத்தையே கூட வாயில்

போட்டுக் கொள்ளும் அது யானை என்ற காரணத்தால். ஆகையால் வெறும் நாரினால், வாழை மரத்தில் யானையைக் கட்டுவதில் பயனில்லை என்று கூறுகிறோம் நாம். 'அரசாங்கமே யானையை அடக்க வாழை மரத்தில் கட்டாதே' என்று அரசாங்கத்திற்கு அறிவுறுத்துகிறோம்.

ஆந்திரம் கேட்போர் சொல்வது என்ன ?

இன்று ஆந்திர மாகாணம் கேட்பவர்கள் என்ன கூறுகிறார்கள் ?

எங்கள் நாட்டுத் தொழில்களை எங்களிடம் விட்டு விடுங்கள். நாங்களே பார்த்துக் கொள்கிறோம். சர்க்காரையும் எங்களிடமே தந்து விடுங்கள் எங்களுக்கு வேண்டியது எங்களுக்குத் தான் தெரியும், புரியும். தெலுங்குத் தெரியாதவர்களுக்கு, அம் மொழியின் அருமை எப்படித் தெரியும். ஆகையால் எங்களால் தான் முடியும் எங்கள் மொழியை வளர்க்க, எங்கள் நாட்டு மக்களின் குறைகள், பாராளுமன்றத் திலிருக்கும் தமிழர்களுக்குத் தெரியாது! வேண்டுமானால் தமிழரின் குறைகள் தெரியலாம்! கிருஷ்ணை நதி எங்கேயிருக்கிறது என்பது தமிழர்களுக்குத் தெரியாது! கோதாவரி எங்கே பிறக்கிறது, எந்த வழியாய் செல்கிறது, எங்கே கலக்கிறது என்பது எங்களுக்குத்தான் தெரியும் தமிழர்களுக்குத் தெரியாது.

அவர்களுக்குக் காவிரிக்கரை நன்றாகத் தெரியும். வைகை நதியின் வளப்பத்தை அவர்கள் அறிவார்கள்.

எங்கள் நாட்டைப் பற்றி எங்களுக்குத் தான் அதிக மாகத் தெரியும். அக்கரையும் இருக்கும். ஆகவே எங் கள் நாட்டைப் பிரித்துக் கொடுங்கள் என்று கேட் கிறார்கள்.

திராவிட நாடு கேட்கிறோம்

ஆந்திரர்கள் ஆந்திர மாகாணம் கேட்கிறார்கள். நாம் திராவிட நாடு கேட்கிறோம். ஆந்திரம், தமிழகம், கேரளம், கன்னடம் ஆகியவைகள் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டாட்சியைக் கோருகிறோம். இந்த நான்கு நாடுகளும் தனித்து வாழ முடியும்.

வளமான நாடு

எல்லா வளங்களையும் பெற்றிருக்கிறது இந்த நாடு. இயற்கை வளம் தேவைக்கு மேல் இருக்கிறது. மூன்று பக்கமும் அகன்ற ஆழமான கடல்கள் உள்ளன. வியாபாரத்திற்கேற்ற துறைமுகங்கள், அக்கடற்கறை யோரங்களில் உள்ளன. சென்னை போன்ற நல்ல நிலையில் உள்ள துறைமுகங்கள்; தொண்டியைப் போல அழிந்த நிலையிலுள்ள துறைமுகங்கள் பல உள்ளன.

நாட்டைப் பிரித்தால்

நாட்டைப் பிரித்து விட்டால், வெளிநாட்டு முத லாளிகள் தலைகாட்ட முடியாது, திராவிடத்தில்! முத லாளிகளின் ஆதிக்கப்பிடியிலிருந்து விடுதலையடையும் திராவிடம். அந்தத் திராவிடத்தை அடைவது தான் நமது இலட்சியம்.

ஆரியம் திராவிடத்தில் வாழாது

இந்த மே தினத்தில் திராவிடத்தைப் பெற உறுதி கொள்ளவேண்டும். அந்தத் திராவிடத்தில் முன் கூறிய வழிகளைப் பயன்படுத்தி முதலாளித்துவத்தை முறி யடித்து விடலாம். இன்னொன்றும் கூறுகிறேன். திரா விட நாட்டில் ஆரியம் இருக்காது. நிச்சயமாய்க் கூறு கிறேன். அது திராவிட நாட்டில் வாழாது, வாழவிட மாட்டோம் என்றால் ஆரியர்கள் திராவிட நாட்டில் வாழ முடியாது, வாழவிட மாட்டோம் என்று பொரு ளல்ல.

ஆரியத்தை அழிப்போம் என்றால், அனந்தாச் சாரியை அழிப்பது என்பதல்ல பொருள். அவர்களை நாம் ஒன்றும் செய்ய மாட்டோம். உங்களுக்கு நன்றாகத் தெரியும்! பல ஆரியர்கள் சீர்திருந்தி, நமது இயக் கத்தை ஆதரித்து நம்மவர்களாக இருக்கிறார்கள்.

'அவர்களை'யும் பிடித்தாட்டுகிறது.

ஆரியத்தை ஏன் திராவிட நாட்டில் வாழ விட மாட்டோம் என்றால், அது நம்மை வாழவிட வில்லை, இனியும் இருந்தால் வாழவிடாது. ஆரியம் நம்மை அழித் திருக்கிறது. அதன் பிடியில் சிக்கி சிதைந்தோர் ஏராளம். அது நம்மை மட்டுமா பிடித்து ஆட்டுகிறது? ஆரியர்களையும் அந்த ஆரியம் பிடித்தாட்டுகிறது? அது அவர்களுக்குப் பிரியமானதென்று நீங்கள் கருது கிறீர்கள் ?

யார் தான் இந்தக் காலத்தில் பஞ்ச கச்சம் கட்டிக் கொள்ள விரும்புவார்கள் ? ஒரு காலை எடுத்து வைத்

தால் மறு காலின் துணி மேலே போகிறது, வேறு காலை எடுத்து வைத்தால் இந்தக் காலின் துணி மேலே போகிறது, வேகமாக நடந்தால் பின்னுல் அவிழ்கிறது, அவசரமாக குனிந்தால்முன்னுல் அவிழ்கிறது இவ்வளவு தொல்லையான அதை அவர்கள்கூட விரும்ப மாட்டார் கள். ஆகவே நம்மையும், அவர்களையும் பிடித்து ஆட்டும் ஆரியம் அழிய வேண்டும்.

ஸ்டாலின் சொன்னர்

மாவீரன் ஸ்டாலின் ஜெர்மானியரை எதிர்க்க விடுத்த வேண்டுகோளில் ' I call the Slaus ' என்று அழைத்தார்.நான்ஸ்லாஸ்இனத்தாரை அழைக்கிறேன் என்ருர். அவர் அங்கே உலக மக்களை அழைக்கவில்லை. ஜெர்மானியரை எதிர்த்துப் போராட ஸ்லாவியர்கள் தேவை, அவர்களுக்குத் தான் சிறப்பாக திறமை இருக்கிறது—ஜனநாயகப் பற்று இருக்கிறது என்பது அவருக்குத் தெரியும். ஆனல் இங்கு சிலர், அவர் வழி நடப்பதாகக் கூறிக்கொள்வோர், டெல்லி சர்க்காரை எதிர்க்கும் நம்மை நையாண்டி செய்கிருர்கள்.

ரஷ்யாவில் ஜார்ஜியர்கள்

ரஷ்யாவிலே ஜார்ஜியா என்று ஒரிடம்; ரஷ்ய மாவீரன் ஸ்டாலின் பிறந்த இடம் அது. இன்றைய தலைவர் மலெங்கோவும் அங்கு பிறந்தவர்தான். நம் ஆதித்தன் அங்கு சென்றிருந்த போது அங்கு கூடியிருந்த மக்களிடம் கேட்டாராம் 'நீங்களெல்லாம் ரஷ்யர்கள் தானே' என்று. அவர்கள் என்ன பதில் சொன்னர்கள்?

கேட்ட ஆதித்தனைப் பார்த்து, கைக் கொட்டி சிரித்தார்களாம். "நாங்கள் ரஷ்யர்களா? யார் சொன்னது? நாங்கள் ஜார்ஜியர்கள் என்று கூறினார்களாம்.

ரஷ்யாவிலே, ஜார்ஜிய பகுதியினர் தங்களை ஜார்ஜியர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். இதை நண்பர் ஆதித்தன் அவர்கள் என்னிடம் குறிப்பிட்டு, "அண்ணாதுரை நீங்கள் ரஷ்யாவிற்குச் சென்று திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கூறினால் ஒத்துக்கொள்ளுவார்கள்" என்று கூறினார்.

நான் காரன்ஸ்மித் நகர் மைதானத்தில் பேசும்போது இதைத்தான் குறிப்பிட்டேன், 'மாஸ்கோவிற்குச் செல்லுவேன். மலெங்கோவிடம் சொல்லுவேன்' என்று.

பேனா எடுத்தார்; எழுதினார்!

இது பொறுக்கவில்லை நண்பர் ஜீவானந்தத்திற்கு. பேனாவை எடுத்தார், எழுதினார், இரண்டு பக்கம்.

'நீயாவது மலெங்கோவையாவது, பார்ப்பதாவது' என்று எழுதினார்.

நானாக யாரையும் போய் பார்க்கும் வழக்கம் என்னிடம் இல்லை. அப்படி யாரையாவது பார்க்க வேண்டும் என்று விரும்பினால், 'நீ வரக்கூடாது' என்று தடுப்பவர்களுமில்லை. இதற்கு மலெங்கோ மட்டும் விதிவிலக்கா?

இவர் பேச்சும் எழுத்தும் ரஷ்யா வரை செல்லும் என்றிருந்தேன். அது கல்கத்தாவிற் கப்புறம் கால்

வைக்காது என்பதைத் தெரிந்து கொண்டேன். நாஞக செல்ல முடியும், நான் இஷ்டப்பட்டால் பார்க்கவும் முடியும்.

மலெங்கோவின் ஆட்சியில்........

உலகம் முழுவதற்கும் பொதுவுடமைக் கட்சிக்கு தலைமை ஸ்தாபனமாக ரஷ்யாவில் இருந்த தலைமை ஸ்தாபனத்தை (காமின்பாரம்) மலெங்கோவின் ஆட்சியில் கலைக்கப் போகிருர்கள். இதை தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு நாட்டிலும், பொதுவுடமைக் கொள்கையை அவ்வவ் நாட்டின் நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளலாம். விரைவில் ரஷ்யாவில் உள்ள தலைமை ஸ்தாபனத்தைக் கலைக்கப் போகிருர்கள்! மிக விரைவில்!

நண்பர்கள் நாம் தான்

ஆனல் கம்யூனிஸ்ட் நண்பர்கள் நம்மீது சீறுகிருர்கள். நண்பர் ஜீவானந்தம் எதிர்க்கிருர், ராமமூர்த்தி மறுக்கிருர்.

பிரிவினையில் பொதுவுடமை இருக்கிறது. இப்போழுது ஆத்திரப்பட்டு கொஞ்சம் ஆவேசமாக நம்மைத் திட்டுபவர்கள், கொஞ்சம் பொறுத்து அவகாசமாக அலசிப் பார்த்தால் உண்மையை அறிவார்கள் என்று நம்புகிறேன். நான் மீண்டும் கூறுகிறேன், தென்னுட்டில் கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கும் நண்பர்கள் நாம் தான்! நம்மைத் தவிர வேறு நண்பர்கள் தென்னுட்டில் அவர்களுக்கு, நிச்சயமாக வேறு யாருமில்லை.

சொன்னேன், செய்தேன்

அண்ணாமலை பல்கலை கழகத்தில் நான் ஒரு சமயம் சொற்பொழிவாற்ற சென்றிருந்தேன். கல்லூரியை விட்டு ஜஸ்டிஸ் கட்சியில் ஈடுபட் டிருந்த நேரம் அது. அப்போது அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நெடுஞ் செழியன், அன்பழகன் முதலியோர் மாணவர்கள்.

நான் அங்கு வருவதை எதிர்த்து சில மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். தோழர் பால தண்டாயுதமும் அன்று, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் மாணவர். சில மாணவர்களின் எதிர்ப்பு எனக்கு நன்றாகத் தெரியும்.

இரண்டு நாள் சொற்பொழிவு செய்தேன். சொற் பொழிவு நேரம் தவிர மற்ற நேரத்தில் மாணவர்கள் என்னை சூழ்ந்து கொண்டிருந்தனர். மாணவர்கள் என் னைப் பல கேள்விகள் கேட்டார்கள். "ஜஸ்டிஸ் கட்சி பணக்காரர்களின் ஸ்தாபனமாக மாறி விடுகிறதே, சீமான்களின் பூட்ஸ் துடைக்கும் கட்சியாக ஆகிவிடு கிறதே" என்று குறைபட்டனர்.

அவர்களிடம் சீக்கிரத்தில் அதை பாமர மக்களின் கட்சியாக, மாற்றுகிறேன் என்று சொன்னேன். சீமான்களின் பிடியில் எப்படியோ சிக்கிக்கொண்ட கட்சியை, மாளிகையிலிருந்து மண் குடிசைக்கு, மைதா னத்திற்கு கொண்டு வரவே முயல்வேன் என்று சொன் னேன்.

சொன்னபடி திராவிடர் கழகமாக மாற்றி, சேலத் தில் அரசாங்கத்தார் தரும் 'சர்' முதலிய பட்டங்களை

கழற்றி எறியவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தேன். மிட்டா மிராசுகள், கட்சியைவிட்டு ஓடினர். ஏழை மக்களின் ஸ்தாபனமாக மாறியது கட்சி!

பட்டம் பதவி பெற்றவர்களை விட்டு, விலகி மக்களின் கழகமாக மாறிவிட்டது. அதில் பெருத்த முதலாளிகள் கிடையாது.

பெரிய முதலாளி

எங்கள் கழகத்தில் இருக்கும். மிகப் பெரிய முதலாளி என்று மூர்த்தி சுருட்டு தயாரிக்கும் K. K. நீலமேகம் அவர்களைத்தான் சொல்லலாம்.

நாங்கள் பாடுபட்டு பெறும் திராவிட நாட்டை சர். ஆர். கே. சண்முகத்திடம் விட்டு விட்டால் நீங்கள் எங்களைக் குறை கூறலாம், திட்டலாம்.

இராமனின் பாணமா?

வெறும் பொதுவுடமைக் கொள்கை சாதி, பேதத்தை ஒழித்து, மதப்பிடியி லிருந்து விடுவித்து, மூடு பழக்கங்களி லீடுபட்ட மக்களை விடுதலை செய்து, நம் நாட்டை நம்மிடம் தருமா? இராமன் விட்ட கணை இராவணனின் உடல் முழுவதும் துளைத்து, சீதா, சீதா என்ற உணர்ச்சி எங்கேயாவது இருக்கிறதா என்று தேடிப் பார்த்து, பிறகு கடலில் மூழ்கி, மீண்டும் இராமனின் அம்புறாத்தூணியில் வந்து புகுந்து கொண்டதாம். அதைப் போல இங்கிருந்து விடும் கணை விந்திய மலையைத் தொட்டு, மேலும் தொடர்ந்து சென்று, டெல்லி

வரையிலும் பாயும் என்றால் நம்ப முடியுமா? நல்ல வில் வீரன் உண்மை என்று ஒத்துக் கொள்வானா? இதை ஒத்துக்கொண்டால் இதை புதிய வைதிகம் என்று தான் சொல்லவேண்டும்.

பிரிவினை வேண்டும்

ஆகையால்தான் பிரிவினை வேண்டும் என்கிறோம். திராவிட நாடு திராவிடர்க்கே வேண்டும். இந்தியாவி லிருந்து பிரித்து தரவேண்டும். காட்டை வெட்டி, வேலி யிட்டு மரங்களைச் சாய்க்க வேண்டும் என்கிறோம். புலி கண்டிப்பாய் பதுங்கி பாய முடியாது.

நாட்டுப் பிரிவினையால் பொதுவுடமை இருக்கிறது. லெனினையும், மார்க்ஸையும் நன்றாக மீண்டும் படித்துப் பார்க்கட்டும்.

ஸ்காண்டிநேவியா என்ற நாடு பிரிந்து, நார்வே, ஸ்வீடன் என்று இரு நாடுகளாக இல்லையா? ஏன்? ஒன்றாக இருக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாதா? அங்கே மார்க்ஸ் புத்தகம் இல்லாமலா இருக்கும்? லெனின் படம் அங்கு இருக்காதா?

மார்க்ஸ் தத்துவத்தை—லெனினிஸத்தை படித்த வர்கள்—படித்தும் மறந்து விடாமல் இருக்கிறவர்கள் விரைவில் தெளிவு பெற்று விடுவார்கள் என்ற நம் பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால் கடந்த காலங் களில் பல தடவைகள் குழம்பிவிட்டாலும், முடிவில் தங்களைத் திருத்திக் கொள்ள தயங்காதவர்கள் என் பதை அவர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

மும்முறை முழங்குவோம்

திராவிட நாடு பிரிந்தால் அங்கு பொதுவுடமை இல்லாமல் போய்விடாது. திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு திராவிடருக்கே என்ற கொள்கையிலேயே இருக்கிறது, இன்றைய மே தினத்தில் நாம் கலையும் முன் திராவிட நாடு திராவிடருக்கே என்று மும்முறை முழங்குவோம்.

திராவிட நாடு திராவிடருக்கே!
திராவிட நாடு திராவிடருக்கே!
திராவிட நாடு திராவிடருக்கே!

மே தினங்களில் அண்ணா

வைகாசியில் கருடசேர்வை, ஆனியில்திருமஞ்சனம், ஆடியில் பூர உற்சவம், ஐப்பசியில் தீபாவளி, கார்த் திகையில் தீப விழா, மார்கழியில் திருவாதிரை, தையில் பூசம், மாசியில் மகம், பங்குனியில் உத்திரம், சித்திரை யில் பௌர்ணமி இப்படி மாதந்தோறும் ஒவ்வொரு திருவிழா நடத்தி, தலைமுறை தலைமுறையாகப் பழக்கப் பட்ட மக்களிடையே, மே தின விழாக் கொண்டாட முற்பட்டிருக்கிறோம். மே விழா, மேதினியில் மக்களுக்கு வாழ்வளிக்கும் விழா என்று கூறினால், மக்கள் சுலபத்தில் நம்பமாட்டார்கள்; ஆச்சரியப்படுவார்கள். நாட்டு மக்களிலே, சிந்திக்க கற்றுக்கொண்ட பகுதியினருக்கு மட்டுமே, மே தின விழாவின் முக்கியத்துவம் தெரியும். மற்றவர்கள், இன்னமும் நான் முன்னால் குறிப்பிட்ட பல்வேறு திருவிழாக்களிலேயே ஈடுபடுபவர்கள்—குடும்பம் குடும்பமாக! பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம். நாடு அல்ல இதற்கு எல்லை! பாட்டாளிகள், வாழ்வுக்காக—விடுதலைக்காக—உரிமைக்காக மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது, 8 மணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது மற்ற 8 மணி நேரம் ஓய்வாக இருப்பது—இந்தத் திட்டத்தை, மே தினம் எடுத்துக் கூறுகிறது. பாட்டாளிக்குப் புது வாழ்வு அமைய வேண்டுமானால், இந்தத் திட்டம் தேவை.

உழைத்து அலுப்பதும், உருக்குலைவதும், ஓயாமல் உழைப்பதும், வாழ்வின் சுவையையே காணுதிருப்பதும், இன்று பாட்டாளியின் 'கதி'யாக இருக்கிறது. இதனுல், தொழிலாளி, துயரின் உருவமாகிருன். அடிமைப்படுகிருன். வாழ்வு பெரியதோர் சுமை என்று எண்ணுகிருன். இந்த நிலையை மாற்றவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள், எட்டு மணி நேர வேலை திட்டத்தை வலியுறுத்தினர். அதனை வலியுறுத்த, ஆண்டு தோறும் மே மாதம் முதல் தேதி அன்று விழா நாளாகக் கொண்டாட்டம் நடத்த ஏற்பாடு செய்தனர். இந்த விழாவின் துவக்கத்தின்போது, சோவியத் ரஷ்யா இல்லை! ஜாரின் ரஷியாவே இருந்தது. ரஷ்யா நாடு அல்ல; இவ்விழா விமரிசையாக நடந்த இடம் அமெரிக்கா. எனவே, மே தினத்தைப் பாட்டாளிகளின் விடுதலைக்காகப் பாடுபடும் நோக்கங் கொண்ட எல்லா கட்சியினரும் கொண்டாடலாம்.

ஜாரின் கொடுங்கோலாட்சிக் காலத்திலும், ரஷ்யாவில், மே தினம் மகத்தான விழாவாகக் கொண்டாடப்பட்டே வந்தது. பயங்கரமான அடக்குமுறை இருந்துங்கூட, மே தினத்தன்று ஊர்வலம் நடத்தியும், துண்டு வெளியீடுகளை வழங்கியும், பொதுக்கூட்டம் நடத்தியும், மே தினத்தை அவர்கள் கொண்டாடத் தவறியதில்லை. போலீசின் தடியடி மட்டுமல்ல, பட்டாளத்தாரின் குண்டுகள், விழாக் கொண்டாடுவோர் மீது பாய்ந்த காலம் அது.

மே தினத்தைத் தொழிலாளரின், விடுதலை விழா நாளாக மாற்றி அமைத்தவர் மாவீரர் லெனின். தங்கள்

குறைகளைப் போக்கிக் கொள்ள, உரிமைகளைப் பெற இந்த மே தினத்தைப் பரணி பாடும் நாளாக்கினர் அப்புரட்சி வீரர்! அவருடைய அரிய முயற்சியினால் ரஷ்யாவிலே, மே தின விழா, ஜார் ஆட்சியை ஒழிக்கும் மாபெரும் புரட்சிக்குப் பயிற்சிகளாக அமையலாயிற்று.

கொடுமைகளைக் கண்டு அஞ்சா நெஞ்சமும், பயங்கர அடக்குமுறை கண்டும் பணிய மறுக்கும் உரமும், வாட்டி வதைக்கும் எதேச்சாதிகாரத்தின் முன்பு வளையாத போக்கும்பெற, மே விழாவைப் பாசறை பள்ளியாக்கிக் கொண்டனர், ரஷ்யப் பாட்டாளி மக்கள்!

மற்றக் கட்சிக்காரர்கள் மே தினம் கொண்டாடினால்,பொருளாதாரக் காரணங்களை மட்டுமே பெரிதும் வலியுறுத்திக் காட்டுவர். அவர்கள் மக்களின் வறுமைக்கும் வாட்டத்துக்கும் காரணம், பொருளாதார யந்திரக் கோளாறு என்று கருதுகிறார்கள், யந்திரக் கோளாறு, நிச்சயமாகவே மக்களின் வாட்டத்துக்கு காரணந்தான்; அந்த யந்திரம் தகர்த் தெறியப்பட்டு, மக்களின் வாழ்வை மிருக நிலைக்கு கொண்டு போகாத புதிய யந்திரம் செய்யப்பட வேண்டியதும் மிக அவசியந்தான். இதைத் திராவிடர் கழகம் என்றுமே மறுத்ததில்லை. ஆனால், ஏன் இத்தகையசுரண்டல் யந்திரம் உருவாக்கப்பட்டது? எப்படி? யாரால்? மக்கள் ஏன் இதனை அனுமதித்தனர்? ஏன் இன்றும் சகித்துக் கொண்டிருக்கின்றனர்? என்ன கூறி, கஷ்டப்படும் மக்களைச் சுரண்டுபவர்கள், மயக்கியும் அடக்கியும் வைக்க முடிகிறது? என்பன போன்றவைகளைத் திராவிடர் கழகம், மக்கள்

மன்றத்துக்குக் கொண்டு வந்து நிறுத்துகிறது. மற்றக் கட்சிகள், இவைகளை எடுத்துக் காட்டுவதில்லை-அச்சம் காரணமாகவோ, அலட்சியத்தின் காரணமாகவோ, அல்லது அவகாசம் இல்லாததாலோ, எக்காரணங்களைப் பற்றி மற்றவர்கள் இந்த விஷயங்களைக் கூருமவிருப்பினும் நாம் இவை மக்களால் சிந்திக்கப்பட்டு, அந்த சிந்தனையின் பலனாக அறிவுத் துறையிலே ஒரு பலமான புரட்சி ஏற்பட்டாலொழிய, பொருளாதாரப் புரட்சியினால் மட்டும் புது வாழ்வு கிடைத்து விடாது என்று நம்புகிறோம். ஆழ்ந்த நம்பிக்கை இது. எனவே தான், நாம் மனிதன் அடிமைப்பட்ட காரணத்தையும், அந்த அடிமைத்தனம் எப்படி நீக்கப்பட வேண்டும் என்பதையும், நமது பிரச்சாரத்திலே முக்கிய பகுதியாக வைத்துக் கொண்டிருக்கிறோம். மனதிலே உள்ள தளைகளை நீக்குவது அவசியமான காரியமென்பதையுணர்ந்து, ஐரோப்பாக் கண்டத்திலே, பேரறிஞர்களான வால்டேர், ரூசோ போன்றார், அறிவுத் துறைப் புரட்சிக்காக எவ்விதம் பணியாற்றினரோ, அவ்விதமான பணியினையே நாம் புரிகிறோம்.

பூர்ஷுவா (முதலாளித்துவம்) என்ற தத்துவத்தை. விளக்குகின்ற யாரும், அது சுரண்டும் முறை, பிறனுடைய உழைப்பால் வாழும் முறை என்று கூறுவர். நாம் ஆரியம் என்று கூறுவது, இதே நிலையைத்தான் சுரண்டும் முறை—தொழிலின் பேரால் அல்ல, மதத்தின் பேரால்—ஜாதியின் பேரால், பழமையின் பேரால்! புரோலேடேரியன், பாட்டாளி என்று பேசும்போது, நம் கண் முன் தோன்றும் உருவம், உழைத்து உருக்

குலைந்து, தன் உழைப்பை வேறு யாரோ பறித்துக் கொள்ளக் கண்டு பதறி அதனை மாற்ற முடியாததால் திகைத்துத், தலை மீது கைவைத்துக் கொண்டிருக்கும் ஏழையின் உருவமே திராவிடன், அத்தகைய உரு வந்தான்! ஆகவே, பூர்ஷுவா என்பதற்குப் பதில், நம் நாட்டு நிலையைக் கவனித்து, ஆரியன் என்கிறோம்; புரோலோடேரியன் என்பதற்குப் பதில், திராவிடன் என்கிறோம். வர்க்கப் போராட்டம் என்பது தான், இங்கு நாம் கூறும் ஆரிய திராவிடப் போராட்டம்!

ஏசு எமக்காகச் சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் சிந்தினர் என்று பேசும் கிறிஸ்தவர்கள் மன திலே தோன்றக்கூடிய உணர்ச்சியையும், எங்கள் கடவுளாம் கோபால கிருஷ்ணர்! கோபியர்கள் நீர் விளை யாடுகையில் அவர் தம் சேலைகளைக் கவர்ந்து சென்றார்-குழலும் ஊதினர் என்று பேசும் திராவிடருடைய மன திலே தோன்றக்கூடிய உணர்ச்சியையும் ஒப்பிட்டுக் காட்டி, மதம் இங்கு எவ்வளவு கேலிக் கூத்தாக்கப் பட்டிருக்கிறது பாரீர் என்று காட்டுகிறோம்.

இவை யாவும் பாட்டாளிகளின், மீட்சிக்காகவே யன்றி போட்டி மதம் ஸ்தாபிக்க அல்ல. ஆகவே மே தினத்தை மற்றவர்கள் கொண்டாடி வருவதைவிட நாம் நடத்தினல் தான், சமுதாய மத சம்பந்தமான பழம் பிடிப்புகளே சுரண்டும் பொருளாதார யந்திரத்தை அமைத்தன என்பதை, விளக்க முடியும் — விளக்க வேண்டும்.

ஜார் மன்னன் ஆட்சியிலே அவனுல் இழைக்கப் பட்ட கொடுமைகளை ஒழிக்க எப்படி அந்நாட்டு மக்கள்

அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்துப் போராடினார்களோ, பிரான்சிலே பணப் பட்டாளத்தின் கொடுமைகளை எதிர்த்துப் பல பட்டினி பட்டாளங்கள் ஒன்று சேர்ந்து தங்கள் புரட்சிச் சக்தியின் மூலம் லூயி மன்னருக்கு அறிவுறுத்தினார்களோ, அதே போன்று நம் நாட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும். மக்களின் சக்தி ஒன்று திரண்டு மக்களை வாட்டி வதைக்கும் முதலாளித்துவத்திற்குப் புத்தி புகட்ட வேண்டும்.

பாட்டாளிகளின் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால வருங்கால கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மே நாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியா விட்டாலும், கண்ட சிறுசிறு வெற்றிகளை நினைந்து, மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மே நாள் பயன்படுகிறது.

அவன் ஏன் காரில் போகிறான்-அது அவன் வந்த வேளை. நாம் ஏன் கஷ்டப்படுகிறோம்—இது நாம் வந்த வேளை. ஆண்டவனின் கிருபா கடாட்சம் இவ்வளவு தான்; இந்த ஜென்மத்தில் இப்படி கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமென்று எழுதி விட்டான் — என்று நம்பி நாசமாகிறது உழைப்போர் உலகம். இப்படி நம்பும் காரணத்தினாலேயே தொழிலாளர்கள் தமது இணையற்ற சக்தியை மறந்து முதலாளித்துவக் கொடுமைகளுக்கு ஆளாகி நிற்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சியினருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் ஒன்று கூற விரும்புகிறேன். முதலாளியை நோக்கி, தொழிலாளரிடம் நியாயமாக நடவுங்கள் என்று அன்பு முறையில் காந்தியாரைவிட வேறு யாரும் உபதேசிக்க முடியாது. அவர் முகத்திலே தோன்றிய அருள் ஒளியைப் போல் எந்த காங்கிரசாரிடமும் காணமுடியாது. அப்பேர்ப்பட்டவர் தமது கடைசி காலம் வரை முதலாளிகளைக் கெஞ்சி கூத்தாடிப் பார்த்தார்; முதலாளிகளைத் தர்மவான்களென்று வாயார மனமாரப் புகழ்ந்தார். தர்மம் செய்யவே தர்மவான்கள் தோன்றுவது எனப் புகமுரை புகன்றும் கூறியும் பார்த்தார். எதற்கும் முதலாளித்துவம் சற்றுவது விட்டுக் கொடுக்கவில்லை. அவரைவிட இனி எந்த காங்கிரஸ்காரரும் அன்பு முறையில் முதலாளித்துவத்திடம் முறையிட முடியாது. முடியும் என்றால், அது ஏய்ப்பது என்று தான் பொருள்-எனவே அவர் காலத்தில் முயற்சித்துப் பார்த்து சலித்துப் போன முறையை இன்றைய ஆட்சியினர் கையாள்வது வெறும் நடிப்பென்பது மட்டுமல்ல, தொழிலாளர் உலகத்துக்குத் துரோகம் செய்வதுமாகும் என்பதை உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன்.

நம் நாட்டில் உண்மைச் சரித்திரம் நிலவ வேண்டுமானால், ஜாதி பேதம் ஒழிய வேண்டும், ஜாதிக் கோட்டையை இடித்துத் தகர்த்தால் தான் அடிப்படை இறுகிக் கெட்டியாக இருக்கும் மூடப் பழக்க வழக்கங்களை முறியடித்து அதற்கு முற்றுப் புள்ளி வைத்தால் தான் அஸ்திவாரம் பலமாக இருக்கும். அந்த வேலையைத்

தான் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வருகிறது.

இன்று தொழிலாளர்களில் பலர் மயாப் பிரபஞ்ச வாழ்வைப் பற்றியும், ஆண்டவன் திருவடியில் இரண்டறக் கலப்பது எப்படி என்பதைப் பற்றியும் சிந்தனை செய்துகொண் டிருக்கிறார்களே அதை முதலில் போக்கடிக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு முதலில் வாழ்க்கையிலே உள்ள சலிப்பைப் போக்க வேண்டும். இந்த உலகம் பெரியது, விழுமியது, வளமுள்ளது என்ற விரிந்த மனப்பான்மை அவர்களிடையே தோன்ற வேண்டும். நாம் வாழப் பிறந்துள்ளோம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

பஞ்சாங்க மில்லாத வீடுகளை நீங்கள் காண முடியாது.

நாள் பார்க்காத மக்களை நீங்கள் பார்க்க முடியாது.

சகுனம் கேட்காத ஜென்மங்களை நீங்கள் காண்பது அரிது.

மார்கழித் திருநாள் கொண்டாடாத மக்கள் மிகக் குறைவு.

சித்திரா பௌர்ணமிக்குப் பொங்கலிட்டுப் படைக்காத வீடுகளை நீங்கள் பார்க்க முடியாது.

பஞ்சாங்கம் பார்க்கும் பழைய புத்தி அடியோடு ஒழிந்தாலொழிய, மக்கள் பகுத்தறிவைப் பெற முடியாது.

சொக்கநாதர், அரங்கநாதர், மீனுட்சி, காமாட்சி, கோயில்கள் இன்னும் இருக்கின்றன. இவைகள் குறைந்தால் தான் நாடு முன்னேறும், நாட்டிலே நல் லறிவு ஏற்படத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது. நம்முடைய கழகத்தின் அடிப்படைக் கொள்கை நாட்டிலே நல்லறிவைப் புகுத்துவது தான்.

கோழியோடு அதிகாலையில் விழித்தெழுந்து கோட்டானோடு தூங்குகிறுன் நம் தொழிலாளி! ஓயாமல் உழைத்து உழைத்து அருமையான பொருள்களை உற் பத்தி செய்கிறுன். ஆனல் அவன் வாழும் வாழ்க்கை எப்படி? சுருங்கச் சொன்னல் அவன் வாழ்வது மிருக வாழ்க்கை தான். நாகரிக நாட்டிலே, தன்னரசு தழைத்து ஓங்குவதாகச் சொல்லும் இந்த நாட்டிலே தொழிலாளி மிருக வாழ்க்கை வாழ வேண்டி யிருக் கிறது. மிருகங்களுக்கு கிடைக்கும் ஓய்வு கூட ஏழைத் தொழிலாளிக்கு கிடைக்கவில்லை! உற்பத்தியைப் பெருக்கும் தொழிலாளி உயர முடிகிறதா?

சேலத்திலே 200-ம் நெம்பர் வேட்டியை நெய்கிற தொழிலாளி உடுத்துவதோ 30-ம் நெம்பர் மோட்டா வேட்டி. தொழிலாளி கட்டுகிறுன் நான்கு அடுக்கு மாடிகள், அவன் வாழ்வதோ நாற்றமடிக்கும் ஓட்டைக் குடிசையில். அந்த ஓட்டைக் குடிசையிலே ஒன்பது பேர். மூவாயிரம் வகை நெல் நம் நாட்டிலே பயிராகி றது. ஆனல் பயிரிடும் விவசாயிக்கு உண்ணக் கிடைப் பது வரகோ, சோளமோ தான். உற்பத்தி பெருகி ஞல் மட்டும் தொழிலாளிக்குப் போதுமா? தொழிலா ளிக்கு முக்கியமாக வேண்டிய தென்ன? தேவைக்

கேற்ற வசதி, சக்திக் கேற்ற உழைப்பு! சர்க்கார் இதை முறைப்படி வகுக்க வேண்டும். அதிகமாக வேலை செய்யும் மாட்டின் மீது நாம் கவனம் செலுத்துகிறோம். தொழிலாளிக்கோ என்றும் ஒரே நிலை! தொழிலாளி மேனி கறுக்க உழைக்கிறான்; அவன் உற்பத்தியைப் பெருக்கா விட்டால் நமக்கு உணவேது? உடையேது? வெளியிலிருந் தெல்லாம் சென்னையில் வந்து குடியேறிய மக்களுக்கு வீடேது? தொழிலாளியின் உழைப்பாலன்றோ பிர்லாவின் பணப் பை நிரம்பியது. மிட்டா தாரும், மிராசுதாரும் எப்படி உயர்ந்தார்கள். அவர்கள் நாட்டில் சில நாளும் நகரத்தில் சில நாளும் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள்? தொழிலாளியின் இடைவிடா உழைப்பாலன்றோ இவர்கள் வாழ்கிறார்கள். உழைத்து உழைத்து உருக்குலைந்த பாட்டாளி உரிமைகள் கேட்டால் சிறையிலே சுட்டுத் தள்ளப்படுகிறான். நாகரிக சர்க்காரா இதைச் செய்வது?

நாட்டிலே ஏராளமான பஜனை மடங்களுண்டு, ஆனாலும் மக்களுக்குப் பசி தீர உணவு கிடைப்பதில்லை. வற்றாத ஜீவ நதிகள் இருந்தும், வாழ்க்கையில் மக்கள் வெற்றிபெற முடிவதில்லை. கொஞ்சம் கனமான சாமானைத் தூக்க வேண்டுமென்றால் கூட நாம், 'ராமா, ராமா' என்று சொல்லிக்கொண்டுதான் தூக்குகிறோம். முதலாளி கூலி குறைவாகத் தந்தால், அவனை நோகாமல், ஆண்டவனையே நோக்கி, "ஆண்டவனே, உனக்குக் கண்ணில்லையா? ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ, இது தகுமோ, இது முறையோ?" என்று சொல்லி இறைவனைப் பார்த்து மக்கள் ஏங்குவதைப்

பார்க்கிறோம். இந்த விசித்திர நிலையின் மர்மம் என்ன என்ற கேள்வியைத் திராவிடர் இயக்கம் தான் அநேக ஆண்டுகளாகக் கேட்டு வருகிறது.

கடவுளைப் பற்றிக் கவலைப்படுகிற நாடு நம் நாடு. ஒரு கடவுளைப் பற்றிக் கூட அல்ல, பல கடவுள்களைப் பற்றி, கடவுள்களின் குடும்பங்களைப் பற்றி, கடவுள்களின் சமூகம் பற்றி! ஆனால் கடவுளைப் பற்றிக் கவலைப்படாத நாடு, இயேசுவைப் பற்றி எண்ணாத நாடு என்றழைக்கப்படும் ரஷ்யாவிலே, மக்களைப் பிணிகளோ, பஞ்சமோ, வேலையில்லாத் திண்டாட்டமோ அணுகுவதில்லை. இதற்குக் காரணமென்ன? ஏன் இந்த ஏறு மாறான நிலை? இதைத்தான் மே தின விழாவில் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று திராவிட இயக்கம் கேட்கிறது. இந்தக் கேள்வியை வேறு எந்த இயக்கமும் கேட்கவில்லை; கேட்க எண்ணவும் இல்லை; கேட்பார்கள் என்று நாம் கனவு காணவும் முடியாது.

ஆலைத் தொழிலாளி சகுனத்திலே நம்பிக்கை வைத்திருப்பது விசித்திரமானது. அமெரிக்காவிலிருக்கும் தொழிலாளிகள் சகுனம் பார்ப்பதில்லை! ரஷ்யாவிலே உள்ள தொழிலாளர்கள் சகுனம் என்றால் என்ன என்று கேட்பார்க்கள். சகுனம் பாராத மேலை நாட்டுத் தொழிலாளிகள், கடிகாரத்தை கவனித்து நடக்கிற மேனாட்டினர், முன்னேற்றத்தின் உச்சியிலே இருக்கிறார்கள். நம் நாட்டுத் தொழிலாளர்கள் கடிகாரத்திற்கு மதிப்புத் தருவதில்லை. கடிகாரம் வாங்கப் பணமில்லாமலே பஞ்சாங்கம் வாங்கி வைத்துக்கொண்டு

இராகு காலம் பார்க்கிறார்கள்; சகுனம் பார்க்கிறார்கள். இன்னும் தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள்! ஆதியிலே இருந்து, தலைமுறை தலைமுறையாகத் தொழிலாளரின் உள்ளத்திலே, வாழ்விலே தூவப்பட்ட இந்த மாதிரி யான நச்சுப் பொடிகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் தான் பறக்கடிக்கிறது. அதன் காற்றுத் தான் அவற்றை அகற்றுகிறது. அதன் தென்றல் மணம் தான் அவற்றின் நச்சு வாடையை ஒழிக்க முடியும். இது மட்டுமா? இந்த நாட்டிலே தொழிலாளரின் உள் ளத்திலே நடமாடும் எண்ணங்கள், கருத்துக்கள் மாறு படாமல் அப்படியே இருந்து வர அனுமதி தந்துவிட்டு, மூடத்தனம், அறியாமை, குருட்டு நம்பிக்கை இன்ன பிற வளர வழி வகுத்துவிட்டு, பொருளாதார முன் னேற்றம், அரசியல் உரிமை, தொழிலாளர் நலன் காக் கும் பாதுகாப்புகள் அளித்துத் தொழிலாளர் என்ன பயன் காணமுடியும்?

உலகம் மாயம் இல்லை. உழைப்பவன் வாழ்வும் மாயமன்று. ஆனால் உழையாதவன் உல்லாசத்தில் தான் மாயம் இருக்கிறது. உழைப்பின் பெருமையை உணர வேண்டும்; உல்லாசத்தின் ஊற்று, செல்வத் தின் பிறப்பிடம் எங்கே இருக்கிறது என்பதை அறிய வேண்டும்.

உருண்டோடுகிற ரயிலை ஓட்டுபவன் யார்? தொழி லாளி! வானத்திலே ஒய்யாரமாகப் பறக்கும் விமா னத்தை ஓட்டுபவன் யார்? தொழிலாளி! இழையை நூற்று நல்லாடைநெய்பவன் யார்? தொழிலாளி! இரும்

புக் காய்ச்சி உருக்குபவன், இயந்திரங்களை உருக்கு பவன் யார்? தொழிலாளி!

மிராசுதாரர்களின் மேனுமினுக்கி வாழ்க்கைக் கான பொருள்களை உருவாக்குகிறவன் தொளிலாளி, விஞ்ஞானத்தின் அற்புதங்களிடையே, உயிரை ஆபத் துக்குள்ளாக்கி விளையாடுபவனும் தொழிலாளி தான்.

கடலில் மூழ்கி முத்து எடுப்பவன் தொழிலாளி; உழுது நன்செய் பயிரிடுபவன் தொழிலாளி. அந்தத் தொழிலாளி இனம் மகிழ்ந்து கொண்டாடும் திருநாள் தான் இந்த மே தினம்.

மனிதன் உணவு உண்கிறான். மிருகமும் உணவு உண்கிறது. மனிதன் காதல் புரிகிறான். மிருகமும் காதல் புரிகிறது. மக்களிலே ஆணும் பெண்ணும் மருவு கின்றனர். விலங்குகளிலும் அப்படியே. மனிதன் பிரஜா உற்பத்தியில் ஈடுபடுகிறான். மிருகமும் பிரஜா உற்பத்தியில் ஈடுபடுகிறது. ஆனால் மிருகத்திற்குத் தேவைக்கேற்ற வசதி இருக்கிறது. மனிதனுக்கோ தேவைக் கேற்ற வசதி இல்லை.

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு முக்கியமாக வேண்டியவை உணவு, உடை, இருப்பிடம். உணவு வியாபார பொருளாக ஆக்கப்பட் டிருக்கிறது. உடை வியாபாரப் பொருளாக ஆக்கப்பட் டிருக்கிறது. இருப் பிடம் வியாபாரப் பொருளாக ஆக்கப்பட் டிருக்கிறது. இம் மூன்று துறையிலும் பயன்படுத்துவோர் மட்டு

மல்ல—தொழிலாளரும் கசக்கப் படுகின்றனர்; வியாபாரிகளால், அதுவும் பெருத்த முதலாளிகளால், அரசாங்கத்தாரின் சலுகையும் ஆதரவும் பெற்ற, கொழுத்த ஏகபோகப் பெர்மிட்காரர்களால்! ஆகவேதான் விவசாயம், வீடு, தொழில் ஆகியவற்றின் ஆதிக்கத்தைத் தனிப்பட்டவர்களிடம் விட்டு வைக்கக் கூடாதென்று நாங்கள் கூறுகிறோம்.

76140